செ.வெ.எண்:54 நாள்:28.01.2018

**அரியலூர் மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன் அவர்கள் இன்று (28.01.2018) துவக்கி வைத்தார்.**

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி வளாகத்தில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை சார்பில் முதற்கட்ட போலியோ சொட்டு மருந்து முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் **மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன் அவர்கள்** இன்று (28.01.2018) தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் தெரிவித்ததாவது:-**

அரியலூர் மாவட்டத்தில் **28.01.2018 மற்றும் 11.03.2018** ஆகிய நாட்கள் இரண்டு தவணையாக ஐந்து வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் தீவிர **போலியோ சொட்டு மருந்து முகாம்** நடைபெறவுள்ளது. இம்முகாமில் பிறந்த குழந்தை முதல் 5 வயதிற்குட்பட்ட 71,136 குழந்தைகள் பயன்பெறவார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து வழங்க 549 மையங்கள் செயல்படவுள்ளன. நடமாடும் குழு, பேருந்து நிலையங்கள், இரயில் நிலையம் மற்றும் முக்கிய பொது இடங்களிலும், மேலும் வெளி மாவட்டம் மற்றும் மாநிலங்களிலிருந்து சிமெண்ட் தொழிற்சாலைகளின் பணி நிமித்தமாக இடம் பெயர்ந்து வசிப்பவர்களின் ஐந்து வயதிற்கு உட்பட்ட 442 குழந்தைகளுக்கு சிறப்பு மையங்கள் ஏற்படுத்தியும், அதன் மூலமும் அனைத்து ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்களில் பொது சுகாதாரத்துறை, அங்கன்வாடி பணியாளர்களுடன் பிற துறை பணியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ரோட்டரி சங்கங்கள் என 2188 பணியாளர்கள் பணியாற்றவுள்ளனர். இப்பணிகளுக்கு 40 அரசு துறை வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளது.

இம்முகாமிற்கு தேவையான போலியோ சொட்டு மருந்துகள் பெறப்பட்டு, குளிர்சாதன வசதிகளுடன் பாதுகாக்கப்பட்டுள்ளது. அரசால் வழங்கப்படும் போலியோ சொட்டு மருந்து மிகவும் தரமானது, பாதுகாப்பானது. உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றது.

எனவே, அனைத்து 5-வயதிற்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு ஏற்கனவே போலியோ சொட்டு மருந்து கொடுத்திருந்தாலும், தீவிர **போலியோ சொட்டு மருந்து முகாம் நாட்களான 28.01.2018 மற்றும் 11.03.2018** அன்று தவறாமல் போலியோ சொட்டு மருந்து அளிக்க வேண்டுமென **மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சே.தனசேகரன், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.ஹேமசந்த் காந்தி, வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.மேகனராஜன், அரியலூர் நகராட்சி ஆணையர் திரு.வினோத், வட்டார மருத்துவ அலுவலர் மரு.உமாமகேஸ்வரி, நகர்புற மருத்துவமனை மரு.நிரஞ்சனா, வட்டாட்சியர் திருமதி.சு.முத்துலெட்சுமி, மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.